(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

இல. 89.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2019 ஆகஸ்ட் 21 புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

32/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் இதுவரை 10 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள பொலிஸ் கான்ஸ்டபிள்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) பொலிஸ் சார்ஜன்ட் பதவிக்கு நியமனம் செய்கின்றபோது தற்போது அமுலில் உள்ள முறையியல் யாது என்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் கான்ஸ்டபிள்களில் சார்ஜன்ட் பதவிக்கு பதவி உயர்வு பெறுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கான்ஸ்டபிள்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள போதிலும், பதவி உயர்வு கிடைக்காத பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு பதவி உயர்வு வழங்க மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

75/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை,

(i) ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனியின் மூலம் குடிவரவு குடியகல்வு செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) விமானப் பறப்புக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) விமானக் கம்பனி ஈட்டிய வருமானம் எவ்வளவென்பதையும்;

(iv) பெறப்பட்ட வருமானம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்;

ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை நட்டம் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் அந்த நட்டங்களுக்கான காரணங்கள் ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

129/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i ) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் ஆரம்ப நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட திகதி தொடக்கம் இறுதி பணிப்பாளர் சபை வரை அதன் பணிப்பாளர் சபையிலிருந்த ஆட்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் மற்றும் பெற்றுள்ள சம்பளங்கள் மற்றும் ஏனைய அனுகூலங்கள் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iv) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி ஆரம்பம் தொடக்கம் அடைந்துள்ள நட்டமானது வருடாந்தம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(v) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியானது கடன் பெற்றுள்ள மற்றும் கடன் செலுத்தவுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் அக்கடன் தொகைகள் யாவை என்பதையும்;

(vi) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் எதிர்காலம் தொடர்பாக அரசாங்கம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

212/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015.01.08 ஆம் திகதியிலிருந்து இன்று வரை அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கென வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் யாவை என்பதையும்;

(ii) ஒவ்வொரு வாகனத்தினதும் வகை மற்றும் விலை யாது என்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்கென செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

334/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் சமுர்த்தி நிவாரணம் வழங்குவதில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) ஏற்கனவே, சமுர்த்தி நிவாரணத்திற்கு தகைமை பெற்றுக்கொண்டுள்ளவர்களுக்கு சமுர்த்தி நிவாரணம் கிடைப்பதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இது சம்பந்தமாக கவனம் செலுத்தி, சமுர்த்தி நிவாரணம் வழங்குவதிலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

354/ '18

கௌரவ மொஹம்மது நசீர்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கம்பஹா பொலிஸ் நிலையத்தின் 248/177/MOIB ஆம் இலக்க மற்றும் 2017.02.13 ஆம் திகதிய முறைப்பாடு தொடர்பிலான சந்தேக நபருடன், EP-JA-7555 ஆம் இலக்க Toyota Noah வகையிலான மோட்டார் வாகனம், Samsung வகையிலான இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், Nokia வகையிலான ஒரு கையடக்கத் தொலைபேசி, தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிபத்திரங்கள் சில மற்றும் பணம் அடங்கிய பயணப் பொதியொன்று சிவில் பிரசைகள் சிலரினால் 2017.05.01 ஆம் திகதி களுத்துறை மாவட்ட குற்றவியல் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக மேற்படி சந்தேக நபர் 2017.05.01 ஆம் திகதி முதல் 2017.05.06 ஆம் திகதி வரை பாணந்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார் என்பதையும்;

(iii) மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணை நடாத்துமாறு அப்போதைய சட்டமும், ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் MLO/MO/OUT/147/17 ஆம் இலக்க 2017.08.29 ஆம் திகதிய கடிதம் மூலம் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய முன்னேற்றம் யாது என்பதையும்;

(ii) பாதிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டாளர்களான தரப்பினருக்கு நியாயம் வழங்குவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

408/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 8 வருடங்களுக்கும் அதிகமான காலம் பணியாற்றியுள்ள உப பொலிஸ் பரிசோதகர்களுக்கு பொலீஸ் பரிசோதகர் பதவி வழங்கப்படுவதாக விடயத்துக்குப் பொறுப்பான முன்னாள் அமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார் என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அப்பதவி உயர்வுகள் இதுவரை வழங்கப்படாமையின் காரணமாக மேற்படி உத்தியோகத்தர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) எனவே வாக்குறுதியளிக்கப்பட்டவாறு அப்பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அப்பதவி உயர்வுகள் வலுவுக்கு வரும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

441/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018.09.01 ஆம் திகதியன்றுள்ளவாறு களுத்துறை மாவட்டத்தில் இனங்காணப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை, அங்கவீனத்தின் தன்மை, பால்நிலை, அங்கவீன நிலைமையானது பிறப்பின் மூலம் ஏற்பட்டதா அல்லது விபத்தின் மூலம் ஏற்பட்டதா என்பனவற்றை வயதின் அடிப்படையில் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அங்கவீனமுற்ற நபரினதும் பெயர், முகவரி, பொறுப்பாளரின் பெயர், கிராம உத்தியோகத்தர் பிரிவு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) பிரதேச செயலகங்களின் ஊடாக அங்கவீனமுற்ற நபர்கள் பெற்றுக் கொள்ளும் உதவித்தொகையின் அளவு மற்றும் அவர்களின் அங்கவீனத்தின் தன்மை வெவ்வேறாக யாவை யாதென்பதையும்;

(iv) உதவி கிடைக்கவேண்டியிருந்தும் உதவியினைப் பெறாத நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) மேற்படி (i v) இல் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினர் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

495/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கண்டி மாவட்டத்திலுள்ள மாகாண சபைக்கு சொந்தமான வீதிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் மொத்த நீளம் எத்தனை கிலோமீற்றர் என்பதையும்;

(ii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் மாகாண சபை நிதியத்தைக் கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) தற்போது பழுதடைந்த நிலையிலுள்ள ஏனைய மாகாண சபை வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

515/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் "பங்கேற்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை அலுவலர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு மாதாந்த சம்பளம் அல்லது கொடுப்பனவு வழங்கப்படுவதாயின், அது எவ்வளவென்பதையும்;

(iv) அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட ஒவ்வொரு அலுவலரதும் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், உரித்தாகின்ற கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு ஆகிய தகவல்கள் அடங்கிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) குறித்த கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக ஒதுக்கியுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி கருத்திட்டத்தின் மூலமாக எதிர்பார்க்கப்படும் பயனுள்ள பெறுபேறுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

553/ '19

கௌரவ சி. சிறீதரன்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) சிவில் பாதுகாப்புப் படையணித் திணைக்களத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்தப்படும் முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அத்திணைக்களத்தினால் சம்பளம் வழங்கப்படுகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் சிவில் பாதுகாப்புப் படையணியினால் நடாத்தப்படும் முன்பள்ளிகளின் எண்ணிக்கை, சம்பளம் வழங்கப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் ஆசிரியரொருவரின் சம்பளம் என்பன தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) இம் முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களின் சீருடைகளுக்காக பெற்றோர்களிடமிருந்து பணம் அறவிடப்படுகின்றது என்பதையும்;

(iii) சீருடைகளுக்காக ஒரு மாணவனிடமிருந்து அறவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அக்கட்டணம் பெற்றோர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(v) இம்மாணவர்களின் சீருடைகளில் சிவில் பாதுகாப்புப் படையணியின் இலச்சினை அச்சிடப்பட்டிருப்பதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இவ்வாறு பாதுகாப்புப் படையினரால் முன்பள்ளி நடாத்தப்படுவதால் யுத்தத்திற்குப் பின்னரான நல்லிணக்கம், தேசிய ஒற்றுமை மற்றும் ஐக்கியம் ஆகிய விடயங்களில் செல்வாக்குச் செலுத்தமாட்டாதா என்பதையும்;

(ii) வட மாகாண சபைக்குரித்தான இம்முன்பள்ளிகள் சிவில் பாதுகாப்புப் படையணியினால் நடாத்தப்படுவது சட்டபூர்வமானதாகுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

12.

586/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட பிரேரணை இலக்கம் 209 இன் பிரகாரம், அம்பாந்தோட்டை துறைமுகம் ஊடாக செல்கின்ற கடல் மார்க்கத்தை வருடாந்தம் 4,500 எண்ணெய்க் கப்பல்கள் உட்பட 35,0000 கப்பல்கள் பயன்படுத்துவதாக குறிப்பிட்டு, ஆழ்கடலில் எண்ணெய் வழங்கும் பணியில் பிரவேசிப்பதற்கு தனியார் துறையினர் ஊக்குவிக்கப்படுமென முன்மொழியப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவை நடைமுறையில் யதார்த்தமாக்க இதுவரை மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி முன்மொழிவின் பிரகாரம், மேற்படி பணிக்கான உரிமப்பத்திரம் வழங்க வெளிப்படைத் தன்மையுடன்கூடிய விலை கேட்பு முறையியலொன்று பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(iv) அதன் பிரகாரம், ஆழ்கடலில் எண்ணெய் வழங்க உரிமப்பத்திரம் பெற்றுக்கொண்ட தரப்பினர்கள் யாரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

683/ '18

கௌரவ கனக ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பாகிஸ்தான் சர்வதேச விமான நிறுவனத்திற்கு நீண்டகால குத்தகையின் (Wet lease) கீழ் விமானமொன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி விமானம் மணித்தியாலமொன்றுக்கு குத்தகைக்கு விடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) இவ்வொப்பந்தம் எவ்வளவு காலத்திற்கு செல்லுபடியாகும் என்பதையும்;

(iv) இதற்கு அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை கிடைத்துள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், கிடைத்துள்ள தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி குத்தகை முறையின் படி மேலும் விமானங்கள் வழங்குவதற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) இன்றேல், ஒப்பந்தம் செய்வதற்குத் தயாராக இருக்கின்றாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

694/ '19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அரச கடன் தொகை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) சதவீதமாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தலா அரச கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

764/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் நிர்மாணப் பணிகளுக்காக சேருவில பிரதேச செயலகப் பிரிவுக்குச் சொந்தமான மகாவலி கங்கையின் மடன்னட்டி கடவையில் 100 கியூப் மணலை அகழ்வதற்கான உரிமப்பத்திரம் நேரடியாக அத்திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருக்கையில், உரிமப்பத்திரம் வழங்கப்படக் கூடாத சாபிநகர் இறங்குதுறையிலிருந்து மணலைப் பெற்றுக்கொள்வதற்காக பிற நபரொருவரது பெயரில் C483984 ஆம் இலக்க உரிமப்பத்திரத்தை வழங்குவதற்கான காரணம் யாது;

(ii) சாபிநகர் இறங்குதுறையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் மணலில் வண்டல் மண் கலந்துள்ளதால் இதனை துப்பரவு செய்ய வேண்டுமென்பதுடன், இந்த இறங்குதுறையிலிருந்து அகழப்பட்ட மணலில் எந்தளவினை தற்போது சிவில் பாதுகாப்பு திணைக்களம் பெற்றுக்கொண்டுள்ளது;

(iii) சிவில் பாதுகாப்பு திணைக்களத்துக்கு மணல் வழங்குவதற்காக பிற நபரொருவரை இணைத்துக் கொள்வதற்கான அங்கீகாரம் இத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை றுஹுணு பொருளாதார அபிவிருத்திக் கூட்டுத்தபானம்,— றுஹுணு அபிவிருத்தி இடப்பரப்பினுள் பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களையும், திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் அல்லது செய்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதனை அடையாளங்காணும், வகுத்தமைக்கும் மற்றும் ஒருங்கிணைக்கும் நோக்கத்துக்காக இலங்கை றுஹுணு பொருளாதார அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தைத் தாபிப்பதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

---

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— 8 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 வரை இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு 8(5) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இலங்கையின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்கள் பற்றி ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு,— 2019 மே 22 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினால் நியமிக்கப்பட்ட, 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இலங்கையின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்கள் பற்றி ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கு பாராளுமன்ற விசேட குழுவின் இறுதி அறிக்கையை முன்வைப்பதற்கு வழங்கப்பட்ட கால எல்லை பாராளுமன்றத்தின் 102 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2019 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு இப்பாராளுமன்றம் அனுமதி வழங்குமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— சட்டவாக்க நிலையியற் குழு,— 51(3)(ஆ) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2019 யூன் 27 ஆம் திகதி சபாநாயகரினால் சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றப்படுத்தப்பட்ட, "ஊவா மாகாண சபையின் சுற்றுலா அபிவிருத்திப் பிரிவு வரைவு நியதிச்சட்டம்" மீதான அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு வழங்கப்பட்ட கால எல்லை 2019 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு இப்பாராளுமன்றம் அனுமதி வழங்குமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின் கீழ் மருத்துவ உபகரணங்கள் விலைகுறித்தல் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 15 ஆம் திகதிய 2114/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின் கீழ் மருந்துகள் மீதான விலைகளின் உச்சவரம்பு தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மே 15 ஆம் திகதிய 2123/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

மக்கள் வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

*நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,—* 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ், பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 26 ஆம் திகதிய 2116/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

*நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,—* 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 22 ஆம் பிரிவின் கீழ் சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மே 14 ஆம் திகதிய 2123/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

*நிதி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,—* 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2019 மாச்சு 5 ஆம் திகதிய 2113/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

*நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,—* 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பாக நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஏப்பிறல் 04 ஆம் திகதிய 2117/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 52(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் தீர்ப்பாளர்களை பதிவுசெய்தல் தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 08 ஆம் திகதிய 2113/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 53(2) மற்றும் 54(1)(அ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீட்டு நடவடிக்கைமுறை தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 28 ஆம் திகதிய 2116/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 55(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் தகவற் செயலகம் தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 28 ஆம் திகதிய 2116/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 11.

அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 29 (2)(ஈ) ஆம் பிரிவின் கீழ் ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்வதற்கான திட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பில் அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஏப்பிரல் 11 ஆம் திகதிய 2118/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின்108 (1) உறுப்புரையின் பிரகாரம் கௌரவ உச்ச நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களுக்குச் செலுத்தும் சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுவதோடு, 108(2) ஆம் உறுப்புரையின் மூலம் அந்த நீதிபதிகளை நியமித்த பின்னர் அவர்களுக்குச் செலுத்தவேண்டிய சம்பளம் மற்றும் ஓய்வூதிய உரிமைகளைக் குறைக்கக்கூடாதென ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதனாலும்;

ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 25 ஆம் பிரிவு திருத்தப்பட்ட இல 1190/18 ஆம் இலக்க, 2001.06.28 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவர் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஒருவர் ஓய்வுபெறும் போது பெற்றுக்கொண்ட சம்பளத்தின் 90% ஐ ஓய்வூதியமாகப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுடைவர் ஆவாரென்பதனாலும்;

உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்கு தனது விருப்பத்தின் பேரில் அவர்களுக்குரிய மாதாந்த ஓய்வூதியத்தைப் போன்ற 24 மடங்கு தொகையை ஓய்வூதியப் பணிக்கொடையாகப் பெற்றுக்கொள்ள முடியும். எனினும், நீண்ட காலமாக இந்தப் பணிக்கொடை ஓய்வூதியத்திலிருந்து அறவிடப்படாமல் முழுமையான ஓய்வூதியத் தொகையும் மாதாந்தம் செலுத்தப்பட்டுள்ளது. சனாதிபதி அவர்களால் 2019 யூன் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைவாக 2019 யூலை 19 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பணிக்கொடையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவிப்பதன் மீது அந்தப் பணிக்கொடையை மீண்டும் அரசாங்கத்திற்கு அறவிட்டுக்கொள்ளும் முறைக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொருள்கோடல் செய்து, முற்பணத் தொகையாக உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள பணிக்கொடையை 10 வருடங்களுக்குள் அதாவது, 120 மாதாந்த தவணைகளில் மீண்டும் அறவிட்டுக்கொள்வது அரசியலமைப்பின் 108(2) ஆம் உறுப்புரையை மீறியதாக அமையாதென்பதனாலும்;

உச்ச நீதிமன்றத்தின் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களின் ஓய்வூதியக் குறைப்பு அல்லது அதற்கு இடைநேர் விளைவான விடயங்கள் மீது தாக்கம் செலுத்தும் சகல விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அரசியலமைப்பினால் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டிருப்பதை சட்டத்துறை தலைமையதிபதி சுட்டிக்காட்டியுள்ளதாதலாலும்;

அவ்வாறே, அண்மையில் நீதிமன்றத் துறைக்கு உயர் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருப்பதும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதனாலும்;

அதற்கிணங்க, உச்ச நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வூதியப் பணிக்கொடையை அமுலிலுள்ள சட்டத்திற்கு அமைவாக 120 மாதங்களில் மீண்டும் அறவிடப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றும் தீர்மானிக்கின்றது.

* 13.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையின் பிரகாரம், சனாதிபதி அவர்களால் அரசியலமைப்புப் பேரவையின் அனுமதியின் கீழ் 2019.04.26 ஆம் திகதியிலிருந்து திரு.டபிள்யூ.பி.சி. விக்கிரமரத்ன அவர்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

அவரது சம்பளம் 153(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுதலும் வேண்டுமென்பதனாலும்;

தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய சனாதிபதி அவர்களால் 2019 யூன் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான 2019 யூலை 19 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு.டபிள்யூ.பி.சி.விக்கிரமரத்ன அவர்களுக்கு 2019.04.26 ஆம் திகதி முதல் அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் SL-4 சம்பள அளவுத்திட்டத்தின் 7 ஆவது படிமுறையில் அமர்த்தி சம்பளம் வழங்குவதற்கும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளை செலுத்துவதற்கும் அந்த சம்பள அளவுத் திட்டத்திற்கு அமைய வருடாந்த சம்பள ஏற்றத்தை செலுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாதலாலும்;

அதற்கிணங்க, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு.டபிள்யூ.பி.சி.விக்கிரமரத்ன அவர்களுக்கு திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படும் வகையில் மேற்குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்த வேண்டுமென இப்பாராளுமன்றும் தீர்மானிக்கின்றது.

* 14.

கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர்,— பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் கீழ், 1988 யூன் 2 ஆம் திகதிய 508/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012 ஓகஸ்ட் 30 ஆம் திகதிய 1773/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டதுமான ஒழுங்குவிதி, உடனடியாக வலுப்பெறும் வகையில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஒப்புதலுடன் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 24 ஆம் திகதிய 2055/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 16.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

ஸ்ரம வாசனா நிதியம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

சம்பளச் சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

வணிகக் கப்பற்றொழில் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 24.

மதுவரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015/2016),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2018.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 26.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவச் சட்டத்தின் 23 பிரிவின் கீழ், 2018.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 27.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II பகுதியின் 14-1A ஆம் பிரிவிற்கமைய, 2018.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 28.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II பகுதியின் 14-1A ஆம் பிரிவிற்கமைய, 2018.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 29.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவிற்கமைய, 2019.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 30.

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமைய, 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 31.

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமைய, 2018.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 32.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைக்கான சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைக்கான சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 33.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட்டு லிமிடட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016/2017),— 2003 யூன் 02 ஆம் திகதிய அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இல. PED 12, அத்தியாயம் 6.5.3 இன் பிரகாரம், 2018.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட்டு லிமிடட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.01.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 34.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2015),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய, 2018.08.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.01.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 35.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2013),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்கமைய, 2018.09.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 36.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமைய, 2018.09.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 37.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 38.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்கமைய, 2019.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 39.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.07.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 40.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2017.11.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 41.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 42.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2019.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 43.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 44.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 45.

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளதால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46 (4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களினது எண்ணிக்கை 48 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 45 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

* 46.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 47.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பயணிகள் அல்லது பண்டங்களுக்கான அனைத்துப் பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் அத்தியாவசிய சேவைகள் என பிரகடனப்படுத்தல் தொடர்பில் சனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டு, 2019 யூலை 27 ஆம் திகதிய 2133/65 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 48.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 49.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 50.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

51.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

58.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

59.

ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

60.

இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

61.

டாக்டர். எஸ்.எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

62.

மோகன் லங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

63.

சாயா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.